# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை! ...

7ஆம் பக்கத் தொடர்ச்சி

அதனால்தான் இவ்வளவு ஒரு சிறப்பான ஆட்சி நடக்கிறது. அதை எப்படியாவது தொல்லை கொடுக்க வேண்டும் என்று ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு, சி.பி.ஐ, ஐ.டி ரெய்டு, ஈ.டி இதையெல்லாம் கொண்டு நம்மை மிரட்டப் பார்க்கிறார்கள். நான் பல முறை சொல்லி இருக்கிறேன் மோடி அவர்களே, அமித்ஷா அவர்களே உங்களையெல்லாம் பார்த்து சொல்கிறேன்.

உங்களுடைய சி.பி.ஐ, உங்களுடைய ஈ.டி, உங்களுடைய ஐ.டி ரெய்டு உங்களுடைய உருட்டல் மிரட்டங்களுக்கெல்லாம் பயப்படுவதற்குத் தமிழ்நாட்டிலே ஆண்டு கொண்டு இருப்பது எடப்பாடி பழனிச்சாமியோ, ஓ.பன்னீர்செல்வமோ கிடையாது.

தமிழ்நாட்டில் ஆட்சி செய்து கொண்டிருப்பது தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆண்டு கொண்டிருக்கிறார்.

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் வீடுகளில் ரெய்டு நடந்ததையெல்லாம் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள். ஒவ்வொரு முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் வீட்டிலும் ரெய்டு நடத்தி, எல்லாருடைய செயலையும் புடுங்கி வைத்துத்தான் அ.தி.மு.க.வை மிரட்டி வைத்திருந்தார்கள்.

**கூட்டுக்களவாணிகள்!**

விஜயபாஸ்கர், தங்கமணி, ரமணா அத்தனை முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் வீட்டிலும் ரெய்டு நடந்தது. இதே சி.பி.ஐ மற்றும் ஈ.டி ரெய்டு நடத்தினார்கள். ஆனால், இப்பொழுது, அந்த விசாரணையை நடத்துவதற்கு நம்முடைய ஆளுநர் நமக்கு அனுமதி மறுக்கிறார் என்றால், என்ன காரணம். அ.தி.மு.க.வும், பா.ஜ.க.வும் கூட்டுக் களவாணிகள்.

அதேபோல் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள், மத்தியபிரதேசம் போபாலில் பா.ஜ.கவினுடைய கூட்டம். அங்கே சென்று அவருக்கு எப்போதுமே தி.மு.க ஞாபகம்தான். அங்கே போய் நம்முடைய தலைவரை பற்றித்தான், திராவிட முன்னேற்ற கழகத்தைப்பற்றிதான் பேசியிருக்கிறார்.

என்ன தெரியுமா பேசியிருக்கிறார். தமிழக மக்கள் தி.மு.கவிற்கு வாக்களித்தால், ஒரே ஒரு குடும்பம்தான் வாழ்கிறது. அது யாரு என்றால், கலைஞர் குடும்பமாம். ஆமாம், நான் சொல்கிறேன் ஒட்டுமொத்த தமிழ்நாடுமே தலைவர் கலைஞருடைய குடும்பம்தான்.

**அதானி துணை தேடும் மோடி!**

நான் கேட்கிறேன்... ஒன்றிய பா.ஜ.க. 9 வருடம் ஆட்சி செய்திருக்கிறீர்களே, எந்தக் குடும்பம் வாழ்ந்திருக்கிறது. ஒரே ஒரு குடும்பம்தான். அதானி குடும்பம். உங்களுடைய நெருங்கிய நண்பர் அதானி. 9 வருடங்களில் உலகத்திலேயே பணக்காரர் பட்டியலில் இரண்டாவது இடம் பிடித்திருக்கிறார் அதானி. எங்கே போனாலும் அதானிதான். அதானி ஏர்போர்ட் வந்திடுச்சி, அதானி போர்ட் வந்திடுச்சு, அதானி ஸ்டேடியம் வந்துவிட்டது, அதானி துறைமுகம், அதானி இரயில்வே ஸ்டேஷன்.

யார் அந்த அதானி மோடி அவர்களுடைய மிக மிக நெருங்கிய நண்பர். நான் கூட நகைச்சுவையாக ஒரு கூட்டத்திலே பேசினேன். மோடி அவர்கள் இந்தியாவில் இருப்பதே ரொம்பக் குறைவுதான். உலகம் புல்லா டூர் அடிச்சிட்டே இருப்பாரு.

விமானத்தில் பறந்துட்டே இருப்பாரு. விமானி இல்லாமல்கூடப் போவாரு. ஆனால், அதானி இல்லாமல் போக மாட்டார். அதைத்தான் சகோதரர் ராகுல்காந்தி அவர்கள் புகைப்படத்தோடு நாடாளுமன்றத்தில் காட்டினார்.

கிண்டன்பெர்க் என்ற ஒரு அமெரிக்க நிறுவனம் ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டது. யார் இந்த அதானி எப்படி ஒரு 9 வருடங்களில் இப்படி இந்த நிறுவனம் வளர்ந்திருக்கிறது என்று ஒரு அறிக்கை அதற்குப் பதில் சொல்லுங்கள், யார் இந்த அதானி என்று பதில் சொல்லுங்கள் என்று ராகுல்காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் ப்ரூப்புடன் காட்டினார். அதானி அவர்களும், மோடி அவர்களும் விமானத்தில் செல்கின்ற புகைப்படத்தோடு காட்டினார்.

**“இந்தியா”வின் முதல் வெற்றி!**

பதில் சொல்லுங்கள் மோடி அவர்களே என்று கேட்டார். உடனே அவர் தகுதி இழப்பு. இப்போது உச்சநீதிமன்றம் அவருடைய தலையிலே கொட்டியிருக்கு. ராகுல் காந்தி அவர்கள் மீண்டும் தகுதிபெற்று இன்று நாடாளுமன்றத்தில் உள்ளே நுழைந்திருக்கிறார்.

இதனால் தான் நம்முடைய தலைவர் ராகுல்காந்தி அவர்களுக்கு இந்தியா என்ற கூட்டணிக்கு கிடைத்திருக்கின்ற முதல் வெற்றியின் மூலம் ராகுல்காந்தி அவர்கள் நாடாளுமன்றத்திலே நுழைந்திருக்கிறார். அதுமட்டுமல்ல.

மணிப்பூர் என்ற ஒரு மாநிலம். கேள்விபட்டிருப்பீர்கள். கிட்டத்தட்ட 5 மாதங்களாக பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. 200க்கும் மேற்பட்ட உயிரிழப்பு. இதைப் பற்றியெல்லாம் பேசுங்கள் அப்படியென்றால் அதற்கும் பதில் இல்லை.

நேற்று நாடாளுமன்றத்திலே கிட்டத்தட்ட 15, 16 நாட்களுக்குப் பிறகு மோடி வந்திருக்கிறார். அங்கேயும் வந்து தி.மு.கவை திட்டியிருக்கிறார். மணிப்பூரைப் பற்றிப் பேசுங்கள் என்றால், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் நேற்று பேசியிருக்கிறார். தி.மு.க. ஹிந்தியைக் கற்றுக் கொடுக்கவில்லையாம். ஹிந்தியும், சமஸ்கிருதத்தையும் கற்றுக்கொடுக்காமல் நாம் தடுத்துவிட்டோமாம்.

நான் சொல்கிறேன் திராவிட முன்னேற்ற கழகம், நம்முடைய கலைஞராகட்டும், நம்முடைய தலைவராகட்டும் நாங்கள் என்றுமே, எந்த மொழியாகட்டும்.

எதற்கும் நாம் எதிர்ப்பு கிடையாது. ஹிந்திக்கு நாம் எதிர்ப்பே கிடையாது. ஹிந்தி திணிப்பிற்குத்தான் நாங்கள் எதிர்ப்பு. உங்களை யார் கத்துக்க வேண்டாம் என்று சொன்னார். உங்களுடைய பா.ஜ.க. ஆபீஸ் தி.நகரில் இருக்கிறது. பக்கத்தில் தான் இந்தி பிரச்சாரச் சபா இருக்கிறது. போய்க் கத்துக்க வேண்டியது தானே.

இப்படி ஒரு கேடுகெட்ட ஒன்றிய பா.ஜ.க. அரசை நீங்கள் விரட்ட வேண்டிய நேரம் விரைவில் வந்துவிட்டது. அதேபோலச் சில நாட்களுக்கு முன்பு டெல்லி சர்வேசபல் என்ற பெயரில் நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் மசோதாவை நிறைவேற்றி டெல்லி மாநில அரசினுடைய அதிகாரத்தை ஒரு மாநகராட்சியைப் போலச் சுருக்கி தரம் குறைத்து இருக்கிறார்கள்.

நாட்டின் தலைநகராக இருக்கக்கூடிய டெல்லி மாநிலத்திற்கு இந்த அநியாயத்தைச் செய்திருக்கிறார்கள் ஒன்றிய பா.ஜ.க. அரசு. மாநில சுயாட்சிக்கு நேர்முகமான இந்த மசோதாவை இங்கே இருக்கக்கூடிய அடிமை அ.தி.மு.க. எம்.பிகள் பா.ஜ.கவினுடைய அழுத்தத்தால் அதையும் ஆதரித்து வாக்களித்தார்கள் என்பது மிகப் பெரிய ஒரு துரோக செயல்.

**முதுகெலும்பு இல்லாதவர்கள்!**

அவர்களுடைய கட்சியினுடைய பெயரிலே அண்ணா என்ற பெயர் இருக்கிறது. கட்சியினுடைய கொடியிலே அண்ணாவின் உருவம் இருக்கிறது. ஆனால் இவ்வளவு பெரிய ஒரு துரோகத்தைச் செய்து முதுகெலும்பு என்றால் என்னவென்று தெரியாது என்பதை நிரூபித்து இருக்கிறார்கள். நம்முடைய அடிமை அ.தி.மு.க.வினர். ஒன்பதாண்டு காலம் ஆட்சி செய்த பா.ஜ.க 9 மாநிலங்களில் ஆட்சியைக் கவிழ்த்து இருக்கிறது. ஆகவே, இந்திய ஜனநாயகத்தைக் காப்பதற்கு தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள 40 இடங்களிலும் நம்முடைய இந்தியா கூட்டணியை வெற்றி பெற்றாக வேண்டும் அதற்கான பொறுப்பை நீங்கள் அத்தனை பேரும் ஏற்கவேண்டும்.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞருடைய 45 வது பிறந்தநாள் நிகழ்ச்சியிலே பேசும் பொழுது, பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருப்பார்கள். கலை என்றால் என்னவென்று தெரியுமா, எந்த ஒன்றையும் முறைப்படுத்துவதுதான் கலை. அந்த முறைப்படுத்தப்பட்ட பண்பைப் பெற்றவர்தான் கலைஞர் அதனால்தான் அவருக்குப் பெயர் கலைஞர் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார். முறைப்படுத்தப்பட்ட நடனம், நாட்டிய கலை ஆகிறது, முறைப்படுத்தப்பட்ட பாடல், சங்கீத கலையாகின்றது, முறைப்படுத்தப்பட்ட கட்டடம், கட்டும் முறை கட்டடக்கலை ஆகிறது, அதேபோல் தமிழ்நாட்டை முறைப்படுத்த உழைத்தவர்தான் நம்முடைய கலைஞர் அவர்கள்.

அவர் தமிழ் சினிமாவை தன் வசனங்கள் மூலம் முறைப்படுத்தினார். தமிழ்நாட்டு அரசியலை தி.மு.க. தலைவராக முறைப்படுத்தினார். தமிழ்நாட்டு ஆட்சி துறைகளை முதலமைச்சராக இருந்து முறைப்படுத்தினார்.

எனவேதான் நாம் அவரை கலைஞர் என்று மனதாரச் சொல்கிறோம் என்று சொன்னவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

நம் தமிழ்நாட்டை முறைப்படுத்தி, நமது தமிழ்நாட்டைச் சீரழிக்கலாம் என்று பாசிச கட்சிகள் நினைக்கின்றன. அதற்கு இங்குள்ள அ.தி.மு.க. அடிமைக் கூட்டமும் துணைநிற்கின்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியிலே பேசும் போது இதைக் குறிப்பிட்டு இருக்கிறார். நாம் நச்சுப் பாம்புகளை அடித்து விரட்ட வேண்டும் என்று நினைக்கின்றோம். விஷப்பாம்புகளை அடித்து விரட்ட வேண்டும் என்று நினைக்கின்றோம். அந்த விஷ பாம்புகள் நம்முடைய வீட்டிற்குள் நுழைந்து விடக்கூடாது என்று தடுக்க நினைக்கின்றோம்.

**புதர்களை அழிப்போம் !**

நச்சுப் பாம்பு வந்து தங்குவதற்கு ஏற்ற வகையில், புதர்களை நாம் வீட்டிற்குப் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு நாம் விஷப்பாம்புகளை ஒழித்தே தீர்வோம்' என்று சொன்னால், எப்படி அவற்றை ஒழிக்க முடியும்.

நாம் முதலில் ஒழிக்கவேண்டியது புதர்களையா அல்லது விஷப் பாம்புகளையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டு இருக்கிறார்.

கலைஞர் சொன்ன இந்த உவமையை இன்றைய அரசியலுடன் பொருத்திப் பார்க்க வேண்டும். அப்போதுதான் நமக்குப் புரியும். பா.ஜ.க என்பதுதான், கலைஞர் சொன்ன அந்த விஷப்பாம்பு அது தமிழ்நாட்டிற்குள் வந்து விடக்கூடாது என்று நாம் நினைக்கின்றோம்.

மக்கள் நினைக்கின்றார்கள். ஆனால், தமிழ்நாட்டிற்குள் அ.தி.மு.க எனும் அந்தப் புதர்கள் மண்டி கிடக்கிறது. அந்தப் புதர்களில் தானே பா.ஜ.க எனும் விஷபாம்புகள் வந்து ஒளிந்து கொண்டு இருக்கிறது. எனவே, நாம் விஷப்பாம்புகளை ஒழிக்க வேண்டும் என்றால் முதலில் இங்கே மண்டி கிடக்கும் புதரை ஒழிக்க வேண்டும். பா.ஜ.கவை ஒழிக்க வேண்டும் என்றால், அவர்களுடைய புதர்களாக இருக்கக் கூடிய அ.தி.மு.க.வைச் சேர்த்து ஒழிக்க வேண்டும்.

இந்த இரண்டையும் ஒழிப்பதற்கு நமக்குக் கிடைத்து இருக்கக்கூடிய அருமையான வாய்ப்புதான் வருகின்ற 2024 நாடாளுமன்றத் தேர்தல். இதற்காகதான் நம்முடைய தலைவர் அவர்கள் இந்தியாவின் பல மாநில தலைவர்களை ஒருங்கிணைத்து `இந்தியா’ எனும் பேரில் ஒரு வலுவான கூட்டணியை உருவாக்கியுள்ளார்.

நம்முடைய தலைவர் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் யார் வர வேண்டும் என்பதை விட யார் வரக்கூடாது என்பதில் நாம் மிக மிகத் தெளிவாக இருந்து நம்முடைய தேர்தல் பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

2021 இல் அடிமைகளை வீட்டிற்கு அனுப்பினோம். 2024லில் அடிமைகளினுடைய எஜமானர்களையும் சேர்த்து விரட்டி வீட்டிற்கு அனுப்புவோம் என்று கூறிக் கொண்டு, கலைஞருடைய நூற்றாண்டில் இந்தியா வெல்லவும், பாசிசம் வீழவும் நாம் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்வோம்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், க.செல்வம் எம்.பி., காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் படப்பை மனோகரன், செங்கல்பட்டு மாவட்ட ஊராட்சித் தலைவர் சகோதரி செம்பருத்தி துர்கேஷ், குன்றத்தூர் ஒன்றியப் பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், மாவட்ட அவைத்தலைவர் துரைசாமி, இளைஞர் அணியினுடைய மாநிலத் துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்டப் பொருளாளர் விஸ்வநாதன், மாவட்டத் துணைச் செயலாளர் மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தமிழ்மணி, அன்புச்செழியன், சகோதரர் அன்பு செல்வன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் வந்தேமாதரம், ஒன்றியத் துணைக் குழுத் தலைவர் உமா மகேஸ்வரி, ஒன்றியச் செயலாளர் இளையவர்மன், கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் சேகர், வி.எஸ்.ஆராமிர்தம், பி.சந்தானம், ஜி.கே.என்.ரவி, கூடுவாஞ்சேரி நகர் மன்றத் தலைவர் எம்.கே.டி. கார்த்திக், மாங்காடு நகரச் செயலாளர்கள் பட்டூர் ஜவகர்லால்,

மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் விஜயகுமார், கமலக் கண்ணன், ராமமூர்த்தி, மணிகண்டன், கிராமிகிரான், மாநகர அமைப்பாளர் சத்திய பிரபு, துணை அமைப்பாளர்கள் பிரபு, கார்த்திக், சுப்பிரமணி, இன்சமாம் முல்க், ராஜேஷ்,

ஐடி விங் மாநிலத் துணைச் செயலாளர் சகோதரர் தமிழ்மாறன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.அரசு,

கழகத்தினுடைய இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, வட்ட, வார்டு, கிளை நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!**




## மாநில நூலகங்களின் அதிகார வரம்பை

# ஒருங்கியல் பட்டியலுக்கு மாற்றும் முடிவை உடனடியாக கைவிட வேண்டும்!

## ஒன்றிய அரசுக்கு ‘தீக்கதிர்’ நாளேடு வலியுறுத்தல்!

சென்னை, ஆக.13-

மாநில நூலகங்களின் அதிகார வரம்பை ஒருங்கியல் பட்டியலுக்கு மாற்றும் முடிவை உடனடியாக கைவிட வேண்டும் என ஒன்றிய அரசுக்கு ‘தீக்கதிர்’ நாளேடு 12.08.2023 தேதியிட்ட இதழில் ‘நூலக இயக்கத்தை சிதைக்காதே!’ என்ற தலைப்பில் வலியுறுத்தியுள்ளது.




அது வருமாறு:-

மாநில நூலகங்களின் அதிகார வரம்பை ஒருங்கியல் பட்டியலுக்கு’ மாற்றும் மசோ தாவை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்த கலாச்சார அமைச்சகம் தயாராகி வருகிறது. ஒன்றிய அரசின் இந்த முயற்சிக்கு தமிழ்நாடு, கேரளா அரசுகள் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை மாநிலங்களின் சொந்த அதிகார வரம்பிற்குள் தலையிடுவதாக உள்ளது என்று கேரளா கூறியுள்ளது. நூலகங்களை நிர்வகிப்பதில் மாநில அரசுகளுக்கு உள்ள சுயாட்சியைச் சிதைக்கக்கூடாது என்றும் தொடர்ந்து நூலகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கவேண்டும் என்றும் அம்மாநில அரசு கூறியுள்ளது.

இந்தியாவின் வளமான கலாச்சார பாரம்பரியத்தை உலகளவில் கொண்டு செல்லவும் நூலக அமைப்புகளை நவீனமயமாக்கவும் நூலகங்களை ஒருங்கியல் பட்டியலுக்கு மாற்ற முயல்வதாக ஒன்றிய அரசு வாதிடுகிறது. ஆனால் நூலகங்களை தனது கட்டுப் பாட்டில் எடுத்துக்கொண்டு அதில் தங்களது இந்துத்துவா சித்தாந்தத்தை உள்ளடக்கிய புத்தகங்களைத் திணிப்பதே ஒன்றிய அரசின் நோக்கமாக இருக்கும் என்று நூலக ஆர்வலர்கள் சந்தேகப்படுகிறார்கள்.

நூலகங்கள் ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்குள் சென்றால் புத்தகங்களைத் தேர்வு செய்தல், நிதி ஒதுக்கீடு உள்ளிட்டவை பாதிக்கப்படும். தற்போதைய நூலக கட்டமைப்பில் பலதரப்பட்ட வெளியீட்டாளர்களிடமிருந்து புத்தகங்களை வாங்குவதற்கு வசதியாக நூலகங்களுக்கு மாநில அரசுகளின் சார்பில் கணிசமான நிதி வழங்கப்படுகிறது. கேரளாவில் பள்ளி நூலகங்களுக்குப் புத்தகங்களை விநியோகிப்பதிலும், வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பதிலும் உள்ளாட்சி அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

நூலகங்களின் கட்டுப்பாட்டை ஒன்றிய அரசு எடுத்துக்கொண்டால், இந்த பணிகள் அனைத்தும் சீர்குலையும். புத்தகங்களைக் கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் பொறுப்பை ஒன்றிய அரசு ஏற்கும்போது தேர்வு செய்யப்படும் புத்தகங்களின் வகை குறித்தும் நிச்சயமற்ற நிலை உருவாகும். நாட்டிலேயே கேரளாவில் புத்தகங்களைத் தேர்வு செய்வதில் கூட உள்ளாட்சி அளவில் ஜனநாயகப்பூர்வ ஏற்பாடு உள்ளது.

தமிழ்நாட்டில் பொது நூலக இயக்கம் சுதந்திரத்திற்கு முன்பே மிகவும் வலுவாக வளர்ந்துள்ளது. மக்களுக்கு அறிவைப் போதிக்கும் ஆவணப் பல்கலைக்கழகங்களாக நூலகங்கள் திகழ்கின்றன. ஒன்றிய அரசின் திட்டம், அரசியல் சாசன சட்டத்திற்குப் புறம்பானதாகும். மாநில கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான அத்துமீறலாகும். இந்த யோசனையை ஒன்றிய அரசு உடனடியாக கைவிட வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அனைவரும் இணைந்து - உருவத்தால் பெரிய

# இந்த அழகிய உயிரினத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - உலக யானைகள் நாள் செய்தி!

**சென்னை, ஆக. 13-**

**உலக யானைகள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில், “அனைவரும் இணைந்து உருவத்தால்பெரிய இந்த அழகிய உயிரினத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உலக யானைகள் நாள் செய்தி வருமாறு:-

**தமிழ்நாட்டின் விலைமதிப்பற்ற கானுயிரைக் காக்க நமது அரசு உறுதி பூண்டுள்ளது.**

**அகத்தியமலை யானைகள் காப்பக அறிவிப்பு, இரு யானை முகாம்கள் மேம்படுத்தல், சிதைந்த காடுகளை மீளுருவாக்கம் செய்து மீட்டெடுப்பது, யானைப் பாதுகாவலர்களின் நலன் காப்பது, வனத்துறை நவீனமயம், தெர்மல் கேமராக்களைக் கொண்டு செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் யானைகள் கண்காணிப்பு உள்ளிட்ட புதுமையான தீர்வுகள் என யானைகளைக் காப்பதில் உறுதியாக இருக்கிறோம்.**

**கோயம்புத்தூரில் நடந்து வரும் யானைகள் பாதுகாப்பு மாநாடும் இதனை மேலும் வலுப்படுத்தும். அனைவரும் இணைந்து உருவத்தால் பெரிய இந்த அழகிய உயிரினத்தின் எதிர்காலத்தைப் பாதுகாப்போம்.**

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## 3 நீதிபதிகளை சென்னை ஐகோர்ட்டுக்கு மாற்றி பரிந்துரை

# ராகுல் காந்தியின் தண்டனையை நிறுத்த மறுத்த நீதிபதி பாட்னாவுக்கு மாற்றம்!

## உச்சநீதிமன்ற கொலிஜியம் அதிரடி!

*சென்னை, ஆக. 13 -*

*சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அலகாபாத் உயர் நீதிமன்றம், தெலங்கானா உயர் நீதிமன்றத்திலிருந்து தலா 1 நீதிபதியும், குஜராத் உயர் நீதிமன்றத்திலிருந்து ஒரு நீதிபதியையும் மாற்றம் செய்து உச்ச நீதிமன்ற கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.*

*சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் ஒதுக்கீடு 75. தற்போது 63 நீதிபதிகள் உள்ளனர். இந்நிலையில் அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி வினீத் குமார் சிங், தெலங்கானா உயர் நீதி மன்ற நீதிபதி சுதிர் குமார், குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதி கீதா கோபி ஆகியோரை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்ய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.*

*இதையடுத்து, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் எண்ணிக்கை 66 ஆக உயரவுள்ளது.*

*ஏற்கனவே, உச்ச நீதி மன்ற கொலிஜியம் பரிந்துரை செய்த 4 பேரின் பெயர்கள் இன்னும் ஒன்றிய அரசால் ஒப்புதல் அளிக்கப்படாத நிலையில் வேறு நீதிமன்ற நீதிபதிகள் சென்னை உயர் நீதி மன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பது வழக்கறிஞர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்படுகிறது.*

*இதற்கிடையே, அகில இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு அவதூறு வழக்கில் 2 ஆண்டுகள் விதிக்கப்பட்ட சிறை தண்டனையை நிறுத்திவைக்க மறுத்த குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதி ஹேமந்த் பிரசாக்கை பாட்னா உயர் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.*

*குஜராத் உயர் நீதி மன்றத்திலிருந்து வேறு நீதிமன்றங்களுக்கு 4 நீதிபதிகள் மாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டிருப்பது வழக்கறிஞர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்படுகிறது.*

## கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர்

# ந. ராமசாமி 88வது பிறந்தநாள் விழா!

*பெங்களூரு, ஆக. 13 -*

*கர்நாடக மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.ராமசாமி 88வது பிறந்த நாள் விழா இன்று அவரது வீட்டில் எளிமையாக கொண்டாடப்படுகிறது. இவர் 1950 ஆம் ஆண்டு முதல் கர்நாடக மாநில தி.மு.க.வில் தீவிரமாக செயல்பட்டு வருகிறார். அதற்கு முன்பு பகுத்தறிவு மன்ற செயலாளராக இருந்தார். பேரறிஞர் அண்ணா காலத்தில் 1963 ஆம் ஆண்டு கர்நாடக மாநில திமுக துணை அமைப்பாளராக பதவி வகித்தார்.*

*தொடர்ந்து 60 ஆண்டுகளாக கர்நாடக மாநில தி.மு.க.வில் கொள்கை பிடிப்புடன் கட்சி வளர்ச்சி பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இவர் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரை பெங்களூருவுக்கு வரவழைத்து பொதுக் கூட்டங்கள் நடத்தியவர்.*

*தளபதி தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.*



*இவர் கழகப் பணிகளோடு கடந்த 40 ஆண்டுகளாக தொழிற்சங்க வாதியாக தொழிலாளர்கள் தலைவராக செயல்பட்டு வருபவர். கர்நாடக மாநில தி.மு.க.வின் மூத்த முன்னோடி.*

*திராவிட கொள்கைகளில் மாறா பற்று கொண்டு தி.மு.க.வை உயிர் மூச்சாக நேசித்து வருபவர். இவரது பிறந்தநாளை முன்னிட்டு இன்று திமுக தலைவர்கள் தோழமைக் கட்சி தலைவர்கள் பொதுநல அமைப்புகள் தமிழ் அமைப்புகள் தொழிற்சங்க அமைப்புகள் இவருக்கு வாழ்த்து தெரிவிக்க உள்ளன. இவருக்கு 88 வயது ஆனாலும் 28 வயது இளைஞர் போல் சுறுசுறுப்பாக ஓடியாடி கழகப் பணிகளை தீவிரமாக ஆற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.*

## நாங்குநேரியில் மாணவன் மீது அரிவாள் வெட்டு!

# 6 இளஞ்சிறார்கள் சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்!

## கொலை முயற்சி - வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு!

*நெல்லை, ஆக.13-*

நாங்குநேரியில் மாணவன் மீது அரிவாளால் வெட்டி தாக்கிய நிகழ்வு தொடர்பாக ஆறு இளஞ்சிறார்கள் கைது செய்யப்பட்டு சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டதாக, காவல்துறை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட காவல்துறை விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

நாங்குநேரி காவல் நிலைய சரகம் - நாங்குநேரியில் உள்ள மாணவர்களுக்கிடையே பள்ளி வளாகத்தில் வைத்து தகராறு ஏற்பட்டுள்ளது. பின் நாங்குநேரி பகுதியைச் சேர்ந்த மாணவனின் தாய் அதே பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் தன் மகனிடம் தகராறில் ஈடுபடுவதாக பள்ளி நிர்வாகத்திடம் புகார் தெரிவித்துள்ளார். இதனை மனதில் வைத்துக் கொண்டு இளஞ்சிறார்கள் சேர்ந்து *09.08.2023*ம் தேதி அந்த மாணவனின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அவதூறாகப் பேசி அரிவாளால் தாக்கி ரத்தக் காயம் ஏற்படுத்தியும், தடுக்க வந்த அவருடைய தங்கையையும் தாக்கி காயம் ஏற்படுத்தியுள்ளனர். பின் அந்த மாணவனும், அவருடைய தங்கையும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்து வருகின்றனர்.

மேற்படி சம்பவம் குறித்து நாங்குநேரி காவல் நிலையத்தில் காயப்பட்ட மாணவனின் தாய் அளித்த புகாரின் பேரில், கொலை முயற்சி மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, இக்குற்றச் செயலில் ஈடுபட்ட 6 இளஞ்சிறார்களைக் கையகப்படுத்தி சிறுவர் கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டனர்.

மேலும் மாணவ மாணவியர்களிடையே பள்ளி, கல்லூரிகளில் காவல்துறை, கல்வித்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.